

# முனைவர் ழான் லூய்க் செவ்வியார்

பிரெஞ்சு நாட்டு அறிஞரான முனைவர் ழான் லூய்க் செவ்வியார் 23.03.1956-இல் பிறந்தவர். கணிதமும் மொழியியலும் பயின்ற இவர் தமிழ் இலக்கணப் பாரம்பரியத்தில் தனிக் கவனம் செலுத்தித் தொல்காப்பியம் சேனாவரையர் உரையைப் பண்டிதர் தி. வே. கோபாலையரின் துணையுடன் எழுத்தெண்ணிக் கற்றுப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தவர். தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் உரையுடன் மொழிபெயர்க்கப்பட்ட முதல் மொழிபெயர்ப்பாக இவரது இந்த மொழிபெயர்ப்பு விளங்குவது சிறப்புக்குரியதாகும்.

28 ஆண்டுகளாகத் தேசிய அறிவியல் ஆய்வு மையத்தில் (CNRS) முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றிவரும் இவர், தமிழ் யாப்பிலக்கணத்திலும், திருக்குறளிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் கொண்டவர். தேவாரப் பாடல்களை முழுவதுமாகக் கற்றுத் துறைபோகியவர்.

தமிழ் மொழியுடனான செவ்வியாரின் முதல் தொடர்பு 1981 முதல் 1983 வரையில் தேசியச் சேவை தன்னார்வத் தொண்டராகப் பாண்டிச்சேரியில் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்டது. அந்த இரண்டாண்டு காலத்தில் பல்வேறு கள ஆய்வுகளை மேற்கொண்டு வாய்மொழி வழக்காறுகளை அறிந்துகொண்டவர். 1984-இல் பேராசிரியர் முத்துசண்முகம் பிள்ளை, அறிஞர் தமிழவேள் ஆகியோரிடம் செம்மொழித் தமிழை முறையாகக் கற்றவர்.

பல்வேறு ஆய்வு நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ள இவர், புதுச்சேரியைச் சேர்ந்த ஐ.எஃப்.பி. என்னும் பிரெஞ்சுக் கலாச்சார மையம் வெளியிட்ட ‘கணினித் தேவாரம்’ எனும் ஆக்கத்தில் பங்குவகித்தவர். வரலாற்று அறிவாய்வியல் மொழி (History Epistemology Language) எனும் இதழின் ஆசிரியராக விளங்கியவர். இவர் ஏட்டுச் சுவடிச் சேகரிப்பைக் கணினிமயப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருபவர்.

1995-இல், நளினி பல்பீர், ஜார்ஜஸ்-ஜீன் பினால்ட் ஆகியோருடன் இந்திய இலக்கணம்: கோட்பாடுகள் மற்றும் வரலாறு என்ற கலந்தாய்வரங்கத்தின் (Symposium) இணை அமைப்பாளராக இருந்தவர். 1994 முதல் 2000 வரை EFEO மையத்தின் நிர்வாக மற்றும் நிதி மேலாளராகவும் இருந்தவர்.

செவ்வியாரின் நோக்கம், தமிழரல்லாதவர்கள் பண்டைத் தமிழ் இலக்கியத்தின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ள உதவும் படைப்புகளை (மொழிபெயர்ப்புகள், அகராதிகள், கட்டுரைகள்) வெளியிடுவது என்பதாக அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

**கலைஞர் மு. கருணாநிதி 2022 செம்மொழித் தமிழ் விருது**

முகவரி
CNRS, University Paris-Diderot
Histoire des théories linguistiques (UMR 7597)
jean-luc.chevillard@univ-paris-diderot.fr